KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 28.04.2017

| Date of Council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 28.04.2017 | 1386 | மன்றப்பொருள்:1<br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.09.2016 அன்று சட்டப் பேரவை விதி எண்.110ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெரு விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யும் பணியினை ரூ.320.00 கோடி (ரூபாய் முந்நூற்றி இருபது கோடி ) மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Mode) மேற்கொள்ளவும் அதன் மூலமாக 35% மின் கட்டணம் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.அதன்பேரில் திண்டுக்கல் மாநகராட்சி மற்றும் திருநெல்வேலி மண்டலத்தில் காயல்பட்டணம் நகராட்சியினை உள்ளடக்கியும் மற்றும் இதர மண்டலத்தில் உள்ள 90 நகராட்சிகளில் எரிசக்தி சேமிப்பு நடவடிக்கையில் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA –IV) துறை அரசாணை எண்.39 நாள். 21.04.2017ன்படி வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அதன்பேரில் இந்நகராட்சி பகுதிகளிலுள்ள 1535 தெரு விளக்குகளை எல்.இ.டி தெரு விளக்குகளாக மாற்றும் பணியினை தகுதி வாய்ந்த எரிசக்தி சேமிப்பு நிறுவனங்களில் 100% பங்களிப்புடன் கட்டுமானம் - இயக்குதல் - மாற்றம் முறையில் (Built Operate Transfer Mode) மேற்கொள்ளவும் அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகையில் 2% செலவினத்தை தகுதி வாய்ந்த Indepndent Investment Auditing Agency – க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அரசாணை பதிவு செய்யப்பட்டது மேலும் 2 சதவீத செலவின தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டது |